


தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.08.2024) இந்தியாவிலேயே முதன் முறையாக தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் (சிப்காட்) சார்பில் காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், வல்லம் – வடகால் கிராமத்தில் தொழிற்சாலையில் பணிபுரியும் பெண் பணியாளர்களுக்காக 706.50 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 18,720 படுக்கைகள் கொண்ட சிப்காட் மெகா குடியிருப்பு வளாகத்தை திறந்து வைத்து, பெண் பணியாளர்களுக்கு குடியிருப்புக்கான சாவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, ஃபாக்ஸ்கான் நிறுவனத்தின் தலைவர் யாங் லீயு, நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர். பாலு, சட்டமன்ற உறுப்பினர் கு. செல்வப்பெருந்தகை, வளர்ச்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண் ராய், இந்தியாவிற்கான தைவான் நாட்டு தூதர் பௌஷன் ஹேர், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வே.விஷ்ணு, தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மரு.கி.செந்தில்ராஜ், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.08.2024) இந்தியாவிலேயே முதன் முறையாக தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் (சிப்காட்) சார்பில் காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், வல்லம் வடகால் கிராமத்தில் தொழிற்சாலையில் பணிபுரியும் பெண் பணியாளர்களுக்காக கட்டப்பட்டுள்ள சிப்காட் மெகா குடியிருப்பு வளாகத்தில் மரக்கன்றினை நட்டார். இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, ஃபாக்ஸ்கான் நிறுவனத்தின் தலைவர் யாங் லீயு, நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு எம்.பி., சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை, வளர்ச்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண் ராய், இந்தியாவிற்கான தைவான் நாட்டு தூதர் பௌஷன் ஹேர், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வே. விஷ்ணு, தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின்மேலாண்மை இயக்குநர் மரு.கி. செந்தில்ராஜ், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாட்டில்தான் தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்களின் எண்ணிக்கை அதிகம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

எடுத்துக்காட்டாக, குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்', கல்லூரி மாணவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் 'புதுமைப் பெண் திட்டம்', அது மட்டுமல்லாமல், இன்னும் பல புதுமையான திட்டங்களை பெண்களுக்காக நம்முடைய அரசு செயல்படுத்தி வருகிறது. பணிக்கு செல்லும் தாய்மார்களின் நலன் கருதி, சிப்காட் தொழிற்பூங்காக்களில் உள்ள தொழிற் சாலைகளில் ஏற்கனவே 63 குழந்தைகள் காப்பகம் செயல்பட்டு வருகிறது. மேலும், சிப்காட் நிறுவனம் நேரடியாக குழந்தைகள் காப்பகங்களை ஏற்படுத்த முடிவெடுத்து இருக்கிறது.

பெண்களை தொழில் முனைவோராக உருவாக்க, இளம் வயதிலேயே அதை ஊக்குவிக்கும் வகையில், அரசுப் பள்ளிகளில் 8 முதல் 12ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவிகளுக்காக, உலக வங்கி உதவியோடு தமிழ்நாடு அரசு "WE SAFE" திட்டத்தை தொடங்கி, பயிற்சி அளித்துக் கொண்டு வருகிறது.

நம்முடைய திராவிட மாடல் அரசு 2021 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றதும் தமிழ்நாட்டை இந்தியாவில் மட்டுமல்லாமல், தெற்கு ஆசியாவிலேயே முன்னணி மாநிலமாக உருவாக்க வேண்டும் என்று இலட்சிய இலக்கை கொண்டு செயல்பட்டு வருகிறது. அதில் வெற்றியும் பெற்று வருகிறோம்.

**சுற்றுச்சூழல் - வறுமை ஒழிப்பு முதலிடம் வகிக்கும் தமிழ்நாடு!**

நிதி ஆயோக் அமைப்பின் 2023-2024 ஆம் ஆண்டுக்கான அறிக்கையின்படி,வறுமை ஒழிப்பு, சுற்றுச்சூழல் பராமரிப்பு, குறைந்த செலவில் மாசில்லா எரிசக்தி ஆகிய குறியீடுகளில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முதலிடம் பெற்றிருக்கிறது. பத்து குறியீடுகளில் முன்னிலை வகிக்கிறது. மொத்தம் 13 குறியீடுகளில் தமிழ்நாடு 11ல் தேசிய சராசரியை விட அதிக புள்ளிகள் பெற்றிருக்கிறது.

2023-2024ஆம் ஆண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 9.19 விழுக்காடு பங்களிப்போடு தமிழ்நாடு, இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலம் என்ற நிலையை தக்க வைத்துக் கொண்டிருக்கிறது என்று இங்கு குறிப்பிடுவது அவசியம் என்று நினைக்கிறேன். இந்தியாவிலேயே பன்முகத்தன்மையோடு தொழில் துறைக்கு சாதகமான எல்லா அம்சங்களும் ஒருங்கே அமையப்பெற்ற மாநிலமாக தமிழ்நாடு விளங்கி வருகிறது.

**2023 - 2024 ஆம் ஆண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 9.19 விழுக்காடு பங்களிப்போடு தமிழ்நாடு, இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலம் என்ற நிலையை தக்க வைத்துக் கொண்டிருக்கிறது என்று இங்கு குறிப்பிடுவது அவசியம் என்று நினைக்கிறேன். இந்தியாவிலேயே பன்முகத்தன்மை யோடு தொழில் துறைக்கு சாதகமான எல்லா அம்சங்களும் ஒருங்கே அமையப்பெற்ற மாநிலமாக தமிழ்நாடு விளங்கி வருகிறது.**

நம்முடைய மாநிலத்தில் 39 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் இருக்கிறது. இதனால், உற்பத்தியும் அதிகம் செய்யப்படுகிறது. வேலை வாய்ப்பும் அதிகம் உருவாக்கப்படுகிறது.

**பிற மாநிலங்களுக்கு வழிகாட்டும் முன்னோடித் திட்டங்கள்!**

இன்றைய தினம், சிப்காட் நிறுவனம் தொழில்நுட்ப ரீதியாக ஃபாக்ஸ்கான் நிறுவனத்தோடு இணைந்து திருப்பெரும்புதூர் வட்டம், வல்லம் வடகால் கிராமத்தில் அமைத்திருக்கும் 'தொழிற்சாலைப் பணியாளர்களுக்கான தங்குமிட வசதி'யை திறந்து வைத்திருக்கிறேன். 706 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இது அமைந்திருக்கிறது. 18 ஆயிரத்து 720 படுக்கைகள் கொண்டதாக இது இருக்கிறது. பிற மாநிலங்களுக்கு வழிகாட்டும் முன்னோடித் திட்டம் இந்த திட்டம்.

தொழில் வளர்ச்சி மூலமாகத்தான் வேலைவாய்ப்பு பெருகும், பொருளாதாரமும் விரைவான வளர்ச்சி பெறும்! அதனால்தான் தொழில் வளர்ச்சியில் நாங்கள் தனிக் கவனம் செலுத்தி வருகிறோம்.

2021ல் நம்முடைய அரசு பொறுப்பேற்றது முதல், தொழில் வளர்ச்சிக்காக பல்வேறு சிறப்புத் திட்டங்களை தொடங்கி செயல்படுத்திக் கொண்டு வருகிறோம். குறிப்பிட் டுச் சொல்ல வேண்டும் என்றால், சிப்காட் மூலமாக,

காஞ்சிபுரம் மாவட்டம் ஒரகடத்தில் மருத்துவ உபகரணங்கள் பூங்கா,

பிள்ளைப்பாக்கத்தில் மின்னணு தயாரிப்பு தொகுப்பு,

இராணிப்பேட்டை மாவட்டம், பனப்பாக்கத்தில் மெகா காலணி உற்பத்தி பூங்கா,

மணப்பாறை, திண்டிவனம் மற்றும் தேனி ஆகிய இடங்களில் மாபெரும் உணவுப் பூங்காக்கள்,

தூத்துக்குடியில் சர்வதேச அறைக்கலன் பூங்கா,

விருதுநகரில் பிரதமரின் ஒருங்கிணைந்த ஜவுளி மண்டலம் மற்றும் ஆடைப் பூங்கா,

திருப்பெரும்புதூர் மற்றும் ஓசூரில் 2 சிப்காட் தொழில் புத்தாக்க மையங்கள்,

பெரம்பலூர் மாவட்டம், எறையூரில் புதிய காலணி உற்பத்தி தொழிற்பூங்கா ஆகிய சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

'பரவலான வளர்ச்சியே பார் போற்றும் வளர்ச்சி, சீரான வளர்ச்சியே சிறப்பான வளர்ச்சி' என்பதை உறுதி செய்யும் வகையில், நம்முடைய அரசு பொறுப்பேற்ற பிறகு, தமிழ்நாட்டில் தொழிற் பூங்காக்கள் இல்லாத மாவட்டங்களில், புதிதாக தொழிற் பூங்காக்கள் அமைக்க முடி வெடுத்தோம்.

**சுமார் 12 ஆயிரத்து 500 ஏக்கர் சிப்காட் நிலவங்கியில் சேர்ப்பு!**

அதேபோல், 45 ஆயிரம் ஏக்கர் நில வங்கி உருவாக்க வேண்டும் என்று இலக்கு நிர்ணயித்திருந்தேன்.

இப்போது வரைக்கும், 41 ஆயிரம் ஏக்கர் நிலம் கண்டறியப்பட்டிருக்கிறது. அதனுடைய, சுமார் 12 ஆயிரத்து 500 ஏக்கர் நிலங்கள் சிப்காட் நிலவங்கியில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

சிப்காட் நிறுவனம் மூலம் இருங்காட்டு கோட்டை, திருப்பெரும்புதூர் மற்றும் திருப்பூர் மாவட்டம், நெருப்பெரிச்சல் ஆகிய இடங்களில் மூன்று தங்கும் விடுதிகள் அமைக்கப் பட்டு செயல்பாட்டில் இருக்கிறது.

இந்த வசதிகளை நன்றாக பயன்படுத்திக் கொள்வதோடு, உங்கள் சொந்த குடியிருப்புகளை எவ்வளவு கவனமாக பராமரிப்பீர்களோ, அதே அளவுக்கு இந்த விடுதிகளையும் சிறப்பாக பராமரிக்க முழு ஒத்துழைப்பையும் நீங்கள் வழங்கவேண்டும் என்று தொழிலாளத் தோழர்களை நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

2030ஆம் ஆண்டுக்குள், ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரம் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு வளர்ச்சி அடைய வேண்டும் என்று நான் ஒரு லட்சிய இலக்கை நிர்ணயித்திருக்கிறேன்.

**பத்ம பூஷன் விருதுபெற்றுள்ள ஃபாக்ஸ்கான் தலைவருக்கு பாராட்டு!**

தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின் சிறப்பான செயல்பாடுகள், அந்த இலக்கை நாம் விரைவாக எட்டுவோம் என்று நம்பிக்கை அளிப்பதாக இருக்கிறது. அதற்கு ஃபாக்ஸ்கான் போன்ற நிறுவனங்கள் முழு ஒத்துழைப்பு தர வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, மீண்டும் 'பத்ம பூஷன்' விருது பெற்றுள்ள ஃபாக்ஸ்கான் நிறுவனத்தின் தலைவர் யாங் லீயு அவர்களை மனதார பாராட்டுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

### நெல்லை மாநகர தி.மு.க.

# பகுதிக் கழக நிர்வாகிகள் - மாநகர பிரதிநிதிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் சிறப்புரை!

*நெல்லை.ஆக.19-*

நெல்லை மாநகர தி.மு.க. சார்பில் மாநகர கழக அலுவலகத்தில் பகுதி கழக நிர்வாகிகள்,மாநகர பிரதிநிதிகள் ஆலோசனைக் கூட்டம் மாநகர துணை செயலாளர் அப்துல் கையூம் தலைமையில் பகுதி செயலாளர்கள் பூ.சுப்பிரமணியன்(தச்சை) அன்டன் செல்லதுரை (பாளை) துபாய் சாகுல் (மேலப்பாளையம்) ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

நெல்லை பகுதி செயலாளர் நமச்சிவாயம் வரவேற்புரையாற்றினார். இந்த கூட்டத்தில் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள், கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை துணை முதல்வராக ஆக்கிட வேண்டி தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

இந்நிகழ்வில் நெல்லை மாநகர சு.சுப்பிரமணியன் பங்கேற்று ஆலோசனைகளை வழங்கி உரையாற்றினார்.

நிகழ்வில் மாநகர கழக நிர்வாகிகள் ஸ்டார் முருகன்,சுப்பையா,பாஸ்கர், முகமது கமாலுதீன்,எட்வர்டு ஜான்,பத்மா வதன குமாரி,சடாமுனி,பேபி கோபால், கேபிள் குமரேசன்,காஜாமைதீன்,ராஜ், சிவா, பீர் மஸ்தான்,வள்ளியின்செல்வன், நச்சினார் இனியன்,அவதார் ஷாஜகான், முத்து,ஸ்டார் அப்துல்,மகாராஜன், நயினார்,சங்கர் கணேஷ், முருகன், அந்தோணி ராஜ், பேராத்து செல்வம், சங்கர், சுடலை கண்ணு உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் மாநகர பிரதிநிதி நத்தம் கந்தன் நன்றியுரையாற்றினார்.

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் விவரம் வருமாறு.

முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் தலைமையில் சிறப்பாக நடைபெறும் திராவிட மாடல் ஆட்சியின் காரணமாக நடைபெற்று முடிந்த நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் திருநெல்வேலியில் நாடாளுமன்ற தொகுதி உட்பட 40க்கு 40 தொகுதிகளிலும் பெரும்பான்மையான இடங்களில் வெற்றி கிடைத்தமைக்கு நன்றி தெரிவிப்பது.

நடைபெற்று முடிந்த 2024ஆம் ஆண்டிற்கான நாடாளுமன்ற பொது தேர்தலில் திருநெல்வேலி மக்களவை தொகுதியில் கழகத்தின் கூட்டணி கட்சி வேட்பாளர் ராபர்ட் புரூஸ் அவர்களின் வெற்றிக்கு உழைத்த அனைவருக்கும் நன்றி தெரிவிப்பது.

முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நூற்றாண்டு நினைவு நாணயம் வெளியிட அனைத்து முயற்சிகளையும் எடுத்து அதில் வெற்றி பெற்ற கழகத்தலைவர் முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிப்பது என்றும்.

தமிழ்நாட்டு இளைஞர்கள் கல்வியில் சிறந்து விளங்கிடவும் அவர்களின் எதிர்கால வாழ்வை உயர்த்திடவும் "தமிழ்ப்புதல்வன்" திட்டத்தை தொடங்கி வைத்த திராவிட மாடல் அரசின் நாயகர் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிப்பது என்றும்.

திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றது முதல் நம் தமிழ்நாடு அனைத்து துறைகளிலும் செழித்தோங்கிடும் விதமாக உழைப்பு! உழைப்பு! உழைப்பு! என்னும் தாரக மந்திரத்தை தனது முழு மூச்சாக கொண்டு உழைத்து வரும் முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்திட தொழில் முதலீடுகளை ஈர்க்க வெளிநாட்டு பயணம் மேற்கொள்ள இருக்கும் முதலமைச்சர் அவர்களின் பயணம் வெற்றி பெற வாழ்த்துக்கள் தெரிவிப்பது என்றும்.

வரும் 2026 ஆம் ஆண்டு நடைபெற உள்ள சட்டமன்ற பொதுத்தேர்தலுக்கான பணிகளை தொடங்க வலியுறுத்தி கழகத்தலைவர் முதலமைச்சர் அவர்கள் தேர்தல் ஒருங்கிணைப்பு குழுவை அமைத்துள்ளார்கள்.எனவே 2026 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் 200க்கும் அதிகமான இடங்களில் கழகம் வெற்றி பெற்று மீண்டும் ஆட்சி பொறுப்பேற்கும் வகையில் திருநெல்வேலி சட்டமன்ற தொகுதியை தி.மு.க.வின் கோட்டையாக மாற்றும் வகையில் அனைவரும் பணியாற்றுதல் என்றும்.

முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நெல்லை மாநகர கழகத்தின் சார்பில் ( 03.06.2024 08.07.2024) 100 நிகழ்வுகள் நடைபெற்றுள்ளது. இதில் 101வது நிகழ்வாக கழகத்தின் அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்களின் தலைமையில் வருகிற செப்டம்பர் மாதம் 7ஆம் தேதி அன்று ஹோட்டல் அஃப்னா பார்க்கில் வைத்து 100 நிகழ்வுகளையும் ஏற்பாடு செய்து வெற்றிகரமாக நடத்திய அனைவரையும் பாராட்டி அவர்களுக்கு கேடயம் வழங்குதல் என்றும்.



தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட சுந்தரவேல்புரத்தில் JSW நிறுவனத்தின் சமூக பொறுப்பு நிதி மூலம் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய அங்கன்வாடி மையத்தை நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி., சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பி.கீதா ஜீவன் முன்னிலையில் திறந்து வைத்தார். உடன் தூத்துக்குடி மாநகராட்சி மேயர் பெ.ஜெகன், தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் லி.மதுபாலன் ஆகியோர் உள்ளனர்.

தொடர்ந்து இந்நிகழ்வில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் நடைபெற்று முடிந்த 2024 மக்களவைத் தேர்தலில் நெல்லை மாநகரத்திற்கு உட்பட்ட 55 வார்டு களிலும் அதிக வாக்குகள் பெற்றுத்தர உழைத்த வட்ட செயலாளர்கள் மற்றும் BLA2 முகவர்களையும் பாராட்டுவது என்றும்.

இளைஞர்களின் எழுச்சி நாயகர் கழக இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அயராத உழைப்பையும் பணியையும் பார்த்து அவருக்கு கூடுதல் பொறுப்பு வழங்கி சிறப்பிக்க வேண்டுமென பொதுமக்களும்,கழகத் தொண்டர்களும் விரும்புகின்றனர். எனவே அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை துணை முதலமைச்சர் ஆக்கிட வேண்டி நெல்லை மாநகர தி.மு.க.சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறுதீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.